ஞாலகுருவின் படைப்புக்கள்

# “பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவைச் செயல்படுத்தல் – 2”

ஆவணி மாதம், இந்துமத ஆண்டு 43,73,125



“இந்தப் புவிப்பரப்பிலேயே இந்துமதத்திற்கு ஈடாக, இணையாக, ஒப்பாக எந்த ஒரு மதமும் இல்லை, இல்லை, இல்லை இல்லவே இல்லை” என்ற கருத்தை உலகம் முழுவதும் உணர்த்துவதற்காகவே இந்து மறுமலர்ச்சி இயக்கமும், இந்து முன்னேற்றக் கழகமும் வீறு கொண்டு செயல்படப் புறப்பட்டு விட்டன.

குவலய குருபீடம், குருதேவர்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு.

**43,73,125ஆம் ஆண்டின் ஆவணி மாத வெளியீடு.**

**<u>தலைப்பு:-</u>**

**பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவை செயல்படுத்தல் - 2**

# <u>உள்ளுறை</u>

1. **"அ.வி.தி. மைய செயலகம் அமைத்தல்"** - ஈரோட்டைச் சேர்ந்த சித்தரடியாருக்கு அருட்பணி விரிவாக்கத் திட்ட மையத்தின் செயலகத்தை அமைக்கும் விதம் பற்றி விவரித்து எழுதப்பட்ட திருவோலை.
2. **"அருளாணை பெற்ற குருவாணை"** - ஈரோட்டைச் சேர்ந்த அருட்குடும்பத்தின் தலைவருக்கு குருதேவர் விடுத்த நெடிய அஞ்சல். பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவைச் செயல்படுத்தும் விதத்தைப் பற்றி விரிவாக விளக்கி அருளப்பட்ட அஞ்சல் வடிவக் கட்டுரை இது.
3. **"அறிவிக்கை எண்: 7777; பதினெண்சித்தர் மடாதிபதி குழு"** - இந்தக் குழுவில் இடம் பெறுபவர்களுக்கு வழங்கப்படும் அருட்பட்டங்கள் பதினெட்டிற்கான விளக்கங்கள் உள்ள அறிவிக்கை.
4. **"பதினெண்சித்தர்களின் குடமுழுக்குப் பூசைமுறை"** - குருதேவர் 1992இல் எழுதியருளிய 'ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்' என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட சிறு பகுதி.

# அ.வி.தி. மைய செயலகம் அமைத்தல்

தலைமைப்பீடம்,
22-7-92.

அனுப்புநர்:

தலைவர், குருதேவர், அந்தணர் அண்ணல்,
"ஞானாச்சாரியார்".

பெறுநர்:

அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம்,
சித்தரடியார் பூசப்பன்,
6-36, பெரியார் நகர், ஈரோடு.

(1) யாவும் நலமாகட்டும், வெற்றியாகட்டும், உண்மையாகட்டும், நன்மையாகட்டும்.

(2) பொருளுலகில் தாங்கள் நல்ல செல்வாக்கும், ஆழ்ந்த இந்து மத ஈடுபாடும்; இந்து மத மறுமலர்ச்சிக்காக எதையும் செய்யும் விருப்பமும் உள்ளவர். மேலும் தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் தங்களைச் சிறந்த செயல்வீரராக வளருமாறு வாழ்த்தியிருக்கிறார்கள்.

இவற்றால்தான் தாங்கள், பெரியார் மாவட்டத்தின் நிருவாகக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். எனவே, தாங்கள் பெரியார் மாவட்ட நிருவாகக் குழுவுக்கென செயலகம் ஒன்று

அமையுங்கள். தங்கள் வீட்டிலேயே கூடத் தங்களது பெயரைப் போட்டு,

சித்தரடியார் பூசப்பன்,
தலைவர்,
நிருவாகக் குழு செயலகம்,
அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம்,
பெரியார் மாவட்டம்.

என்று பெயர்ப் பலகை வையுங்கள். இதேபோல, செயலாளர், அமைப்பாளர், பொருளாளர் ... என்று உங்கள் நான்கு பேருக்கும் ஓவியர் திரு ஆறுமுகத்தைக் கொண்டு போர்டு எழுதி அவரவரது வீடுகளின் முன் தொங்க விடுங்கள். இதேபோல நான்கு பேருடைய பெயரையும் போட்டு லெட்டர் பேடு அச்சடித்துக் கொள்ளுங்கள்.

(3) இதேபோல் ஊர் ஊராக யாகசாலை அமைத்து, திரிசூலம் நட்டு, மெய்ஞ்ஞானக் கொடியேற்றி, **அ.வி.தி. மைய செயலகம்** துவக்கிடுங்கள். தலைவர், செயலாளர், அமைப்பாளர், பொருளாளர் என்று நான்கு பேரையாவது உண்டாக்குங்கள்.

(4) இதையொட்டி அந்தந்த ஊரில் மதத் துறையில் ஆர்வம் உள்ளவர்களும் இ.ம.இ. கிளை அலுவலகம் அமைத்து அதற்கென்று தனியாக தலைவர், செயலாளர், அமைப்பாளர், பொருளாளர் நியமித்து உறுப்பினர்களைச் சேர்க்கச் சொல்லுங்கள்.

(5) இதேபோல் சமுதாயத்திலும், அரசியலிலும் ஆர்வமுள்ளவர்களை இ.மு.க. கிளை அலுவலகம் தோற்றுவிக்கச் சொல்லி தலைவர், செயலாளர், அமைப்பாளர், பொருளாளர் என்று நான்கு பேரைத் தோற்றுவித்து செயலகம் அமைத்து விடுங்கள்.

(6) அப்பொழுதுதான்

- ★ கோயில், கோயில் வழிபாடு, கோயில் புத்துயிர்ப்பு;
- ★ வழிபாட்டுக் கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள்;

★ அருளாளர்களுக்குப் பயிற்சி;
★ மாற்றுமத மந்திரவாதிகளிடமிருந்து இந்துக்களைக் காப்பாற்றுதல்;
★ இந்துக்கள் மதம் மாறுவதைத் தடுத்தல்;
★ இந்துமதப் புராண இதிகாசங்களை வளர்த்தல்;
★ இந்துமத வாழ்க்கையை விளக்குதல்;
★ இந்து வேதம் வளர்த்தல்;
★ யாகசாலைகள் ஆங்காங்கே வைத்தல்;
★ மக்களுக்கு முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கம், சக்கரங்கள் கொடுத்து இந்துமதம் காப்பாற்றுதல்;
★ மக்களுக்கு அருட்பட்டம் வழங்குதல், (அறிவிக்கை எண்: 7777);

.... முதலிய பணிகள் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலம் மிகச் சிறப்பாக வளரும்.

நீங்கள் மாவட்டம் முழுவதும் ஒரு தன்னிகரற்ற தலைவராக செயல்படத் தயாராக வேண்டும். உங்களது தலைமையை, அதாவது சித்தரடியார் பூசப்பன் என்ற பெயரை பெரியார் மாவட்டம் முழுவதும் உள்ள ஒவ்வொரு சித்தரடியானின் இல்லத்திலும் காணலாம். நீங்கள் பெரியார் மாவட்ட தலைவராகவே வளரலாம். அதாவது நீங்கள் மிக விரைவில் பெரியார் மாவட்டத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் தலைவராக மாறி விடல் வேண்டும்.

மேற்குமண்டல நிருவாகக் குழுவின் செயலாளர் அருள்மிகு பாச்சல் சின்னமுத்தாயி சன்னிதானம் சித்தரடியார் பாலசுப்பிரமணியம், அமைப்பாளர் தாரமங்கலம் கைலாயநாதர் சன்னிதானம் சித்தரடியார் மா. சௌந்தரம், பொருளாளர் அருள்மிகு கொடுமுடி மகுடேசுவரர் சன்னிதானம் சித்தரடியார் பிரபாகரன் எனும் மூவரும் தங்களோடு சேர்ந்து நீங்கள் நான்கு பேர்களும்; பெரியார் மாவட்டத்திற்குள்

- இந்துவாக வாழுகிறவர்கள்,
- கோயில்களுக்குச் செல்கிறவர்கள்,

- திருநீறு, குங்குமம், நாமம், சந்தனம், சாந்து, ... முதலியவைகளை அணிகிறவர்கள்,
- இந்துத் திருவிழாக்களை கொண்டாடுகிறவர்கள்,

... என்றிருக்கின்றவர்கள் அனைவரது உள்ளங்களிலும், இல்லங்களிலும் இடம் பெற்று மக்களின் அன்றாடப் பேச்சிலும், மூச்சிலும் வாழ ஆரம்பித்து விடுவீர்கள். அதன்பிறகு பெரியார் மாவட்டம் ஆத்திகக் கோட்டையாக மாறும். இந்த அரிய பெரிய செயல்திட்டங்களுக்காகத்தான் நீங்கள் நிருவாகக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். இதைப் புரிந்து செயல்படுங்கள். பிறரையும் செயலாக்க வையுங்கள்.

(7) இந்த ஆகசுட்டு (August) மாத இறுதிக்குள் தலைவர், ‘குருதேவரை’ ஈரோட்டிற்கு வரவழைத்து நான்கைந்து இடங்களில் பொதுக் கூட்டங்கள் பேசுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். 10 அல்லது 15 ஊர்களில், 30 அல்லது 40 இடங்களில் நமது மெய்ஞ்ஞானக் கொடியான சீவலிங்கக் கொடியை ஏற்றுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். முடிந்த வரை பெரியார் மாவட்டத்தின் பல பகுதிகளில், பல ஊர்களில் யாகசாலை அமைத்து “சித்தர் கருவூரார் அ.வி.தி. மையங்களை” தலைவர் குருதேவர் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

சிறப்புக் குறிப்பு:- ஒவ்வொரு இடத்திலும் ஓரிரு மணி நேரம் தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார் அவர்கள் அருட்கணிப்பு, அருளாசி வழங்குவார். அருட்பட்டங்கள் வழங்கி தீட்சை வழங்குவார். புதிய, பழைய கோயில்களை உயிர்ப்பும், புத்துயிர்ப்பும் செய்வார். அறிவிக்கை எண்: 7777 இன் படி ஒவ்வொரு கோயிலுக்கும், ஒவ்வொருவரின் அருட்தகுதிகளுக்கும் ஏற்ப மடாதிபதி, பீடாதிபதி, சன்னிதானம், ஆதினம், பண்டாரம், ..., வாமகோடிப் பீடம் வரை 18 அருட்பட்டங்களை வழங்கி பதினெட்டுப் பேர்களை உடைய “மடாதிபதி குழுக்களை” வீடு தோறும், தெரு தோறும், ஊர் தோறும் அமைத்திடுவார்.

(8) நமது தலைவர், குருதேவர் அனைத்துத் துறைகள் பற்றியும் அழகிய, இனிய, எளிய தமிழிலும், ஆங்கிலத்திலும் மாறி மாறிச் சொற்பொழிவாற்றி உடனுக்குடன் மொழி பெயர்த்துக் காட்டுவார் என்பதால் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், இலக்கிய மன்றங்களிலும், பொதுச் சங்கங்களிலும், கோயில்களிலும் சொற்பொழிவு ஆற்றுவார். இதன்மூலம், இந்து மறுமலர்ச்சி இயக்க உறுப்பினர்களை சேர்த்து இ.ம.இ. கிளை அலுவலகங்களைத் தோற்றுவிக்கலாம்; இந்து முன்னேற்றக் கழக உறுப்பினர்களைச் சேர்த்து இ.மு.க.விற்கு அலுவலகங்களைத் தோற்றுவிக்கலாம்.

குறிப்பு:- இந்துமதத்துக்கு என்று முழுக்க முழுக்க பாடுபட இ.ம.இ.யும், இந்துக்களின் சமுதாய அரசியல் உரிமைகளையும், பெருமைகளையும் பாதுகாப்பதற்கென்று பாடுபட இ.மு.க.வையும் தனித்தனியாக இரு பெரும் இயக்கங்களாக வளர்த்தேயாக வேண்டும்! வளர்த்தேயாக வேண்டும்! வளர்த்தேயாக வேண்டும்! இல்லையேல் "இந்துமதம் இருக்கிறதா? இறக்கிறதா?"; "இந்துமதம் இருக்குமா? இறக்குமா?" என்ற தலைப்புக்களில் நாடு தழுவி மிகப் பெரிய கருத்துப் போராட்டச் சிந்தனை அரங்குகள் உருவாக நேரிடும். அதற்கு இப்பொழுதிருந்தே ஆக்கச் செயல்களை, ஆக்கப் பூர்வமான செயல்திட்டங்களை தங்களைப் போன்றோர் செய்தேயாக வேண்டும்.

(9) இன்றைக்கு மந்திரவாதிகள், பூசாறிகள், சித்து விளையாடல்காரர்கள், ஒரு சில மடாதிபதிகள், சாமியார்கள், சந்நியாசிகள் ஆடம்பரமாக ஆரவாரமாக கூட்டு வழிபாடுகளையும், பூசைகளையும், திருவிழாக்களையும், குடமுழுக்கு விழாக்களையும், வாரவழிபாட்டு மன்றங்களையும், ஊர்வலங்களையும் நடத்தி வருகிறார்கள். ஆனால், இவர்களில் யாருமே

√ இந்து மதம், இந்து வேதம்,

√ இந்து மரபு, இந்து வாழ்க்கை, இந்துப் பண்பாடு,

√ இந்துக் கோயில்,

√ இந்துச் சாத்தரம் சாத்திரம் சாத்திறம்,

√ இந்துத் தோத்தரம் தோத்திரம் தோத்திறம்,

√ இந்து அத்தரம் அத்திரம் அத்திறம்,

√ இந்து மத அருளாளர்கள் வரலாறு,

√ இந்து மத அருளாளர்களின் போதனைகள்,

√ இந்து மத அருளாளர்களின் சாதனைகள்,

√ இந்து மதத்தின் தொன்மை, இந்து மதத்தின் பான்மை,

√ இந்து மதத்தின் மேன்மை, இந்து மதத்தின் நன்மை,

√ இந்து மதத்தின் திண்மை, இந்து மதத்தின் உண்மை

என்ற சொற்களையோ, சொற்களுக்குரிய பொருளையோ பேசுவதுமில்லை, எழுதுவதுமில்லை! பேசுவதுமில்லை, எழுதுவதுமில்லை! பேசுவதுமில்லை, எழுதுவதுமில்லை!

எனவேதான், இந்து மதமும், இந்துக்களும் சிதைத்துச் சீரழிக்கப்படுகின்றனர்; இழித்துப் பழித்து அழித்தொழிக்கப்படுகின்றனர். எனவே, இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியும், இந்து மதத்தை இம்மண்ணுலகில் நிறுவிய பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியும், இந்து வேத நாயகமும், இந்து மதத் தந்தையுமாகிய அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், இ.ம.இ. - இ.மு.க. பாரம்பரியத் தலைவர், இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரிய குருபீடக் குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களை உங்கள் தலைமையில் உள்ள பெரியார் மாவட்ட நிருவாகக் குழுதான் பெரியார் மாவட்டம் முழுவதும் அழைத்துச் செல்ல வேண்டும். அதற்குரிய வண்ணம் செயல்படத் தயாராகுங்கள்.

(10) இவ்வளவு நெடிய பெரிய அஞ்சல் தங்களுக்கு இரண்டாவது முறையாக அனுப்பப்படுகிறது. இந்த அளவுக்கு உங்களுக்கு மதிப்பும்,

மரியாதையும், உரிமையும், பெருமையும் வழங்கப்படுகிறது. இதைப் புரிந்து, விரும்பி, நம்பிச் செயல்பட முன் வாருங்கள்.

(11) அண்மையில் அடுத்தடுத்து இரண்டு மூன்று முறை உங்களது வட்டாரத்தில் சுற்றுப்பயணம் செய்திட்ட நமது இ.ம.இ. - இ.மு.க. இணைப் பொதுச்செயலாளர் அருள்மிகு ஆத்தாள் தேவி அண்ட பேரண்டத்திலிருந்து வந்து அருளாட்சிக் கோல நாயகியாக பத்துத் திருக்கைகளுடன் எழுந்தருளும் ஆத்தாள் தேவி குருமாரியம்மன் சன்னிதானம் சித்தரடியார் இரா. சீனிவாசன் (M.Com.) அவர்கள் தங்களைப் பற்றியும், தங்களுடைய துணைவியார் அன்னபூரணி பற்றியும், மற்றும் செல்விகள் கவிதா, மகேசுவரி ஆகியோருக்கும் தம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளார். எனவே, குருதேவர் உங்களது திருக்குடும்பத்தை அருட்குடும்பமாக அறிவித்து பூசனைப் பொருட்கள் இத்துடன் அனுப்பிப் பாராட்டுகிறார், வாழ்த்துகிறார்.

(12) இது முதல் தாங்களும் பேரார்வத்துடன் உங்களுடைய சொந்தக்காரரர், நண்பர், ... அனைவரையும் இ.மு.க., இ.ம.இ.யில் உறுப்பினராக்கிச் செயல்படுங்கள். வாழ்த்துகிறோம்.

**அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்,**
**22-7-92.**

<u>நகல் நல்குபவர்:</u>

மேற்கு மண்டல இ.ம.இ. செயலாளர், குருமார் வெங்கடேசன், 23/7/92.

**//உண்மை நகல்//**
**//மூலம் : சித்தரடியார் திரு வெங்கடேசன் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்ட கையெழுத்துப் பிறதி நகல்.//**

18-8-92.

# அருளாணை பெற்ற குருவாணை

வழங்குபவர்:

அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார், குருதேவர்,
பதினெண்சித்தர் மடம்,
எண் 3, என். சி. ஓ. நகர், பொன்னேரி.

பெறுநர்:

அருள்மிகு தாரமங்கலம் கைலாசநாதர் சன்னிதானம்
சித்தரடியார் மா. சௌந்தரம் அவர்கள் சமூகத்திற்கு.

1) தாங்கள் கடந்த வாரம் வியாழக்கிழமையே ஈரோடு சேர்ந்திருப்பீர்கள். இருந்தும் தங்களிடமிருந்து தங்களின் நலம்? தங்களின் குடும்ப நலம்? தாங்கள் எப்படி ஊர் போய்ச் சேர்ந்தீர்கள்? தங்களுடைய பயணம் எப்படியிருந்தது? பேருந்தில் (Bus) நெடுந்தொலைவு பயணம் செய்ய நேரிட்டதால் தங்களுடைய துணைவியார் அருள்மிகு பழநி ஆண்டவர் சன்னிதானம் சுசீலா நாச்சியார் அவர்களும், திருநிறைச்செல்வி சித்தர் மகள் அருள்மிகு திருவில்லிபுத்தூர் ஆண்டாள் சன்னிதானம் செயநிர்மலா அம்பிகையும் உடல்நலப் பாதிப்பில்லாமல், அதிகக் களைப்பில்லாமல் பயணத்தில் இருந்திட்டார்களா? என்பதையும் தெரிவிக்கவில்லை. இவற்றைத் தெரிந்து கொள்ள குருபீடம் மிகவும் கவலையுடன் காத்திருந்தார். நல்லவேளையாக ஈரோட்டிலிருந்து அருட்பணிகளை முடித்துத் திரும்பிய சித்தரடியார், அருட்போர் மாதண்ட நாயகங்களுள் ஒருவர் என்ற பொறுப்பேற்றுள்ள அருள்மிகு பாரதகால கடோத்கசன் வழித் தோன்றல், உறையூர்

வெற்றிவேல் தடக்கைக் காளி சன்னிதானம், கும்மிடிப்பூண்டி சுப்பிரமணி அவர்கள் நேரில் வந்து இன்று 18-8-92இல் அனைத்து ஈரோட்டு விவரங்களையும் கூறினர். அதன்பிறகே குருமகா சன்னிதானம் தங்கள் குடும்பம் பற்றிய கவலையை அகற்றிக் கொண்டுவிட்டார். உங்கள் அனைவரையும் வாழ்த்தினர்.

2) பேரன்புடைய சௌந்தரம் அவர்களே! தாங்கள் கடந்த நான்கு உகங்களிலும் குருபீடத்தோடு தொடர்புடையவர். அண்ட பேரண்டங்களிலிருந்து வந்துள்ள கடவுள்களுக்கும், வழிபடு நிலையினர்க்கும், சித்தர்களுக்கும் தொடர்புடையவர். பல பிறப்புக்களில் பேராற்றல் மிக்க முனிவராக, இருடியாக, தவசியாக, ... வாழும் பேறு பெற்றவர். இந்த நான்காம் யுகத்தில் எதிர்பாராமல் ஏற்பட்டு விட்ட குறைகளால், இப்பிறப்பில் மிகுந்த அருள் யோகமும், சித்தி நிலைகளும் பெற்றிருந்தும், காலதாமதமாகவே குருபீடத்தைச் சந்தித்திருக்கிறீர்கள். இருந்தும் விசுவாமித்திரரின் ஒரு கூறுகிய உங்களுக்கு இப்பிறப்பிலும் தவங்களை முடிக்க முடியாமல் அசுர சத்திகளும், அரக்க சத்திகளும், தாடகை போன்ற அரக்கிகளின் சத்திகளும் தடை செய்வதற்கு உற்ற சுற்றமாகவும், உறவினராகவும் தோன்ற நேரிட்டு விட்டது.

உங்களைக் காக்க சிவன்களாக, மாயோன்களாக, இராமனுக, கண்ணனுக திருத்தோற்றங்கள் நடத்திய குருபீடமே பேரருள் புரிந்திட திருவுளம் கொண்டிருக்கிறது. இதற்குரிய எல்லாத் தகுதிகளும், நல்ல மச்சங்களும்; முதுகில், வலது கையில், நெற்றியில் நல்ல வரிகளும் (இரேகைகளும்); நாக்கில் நல்ல இலக்கணங்களும் அமைந்திருக்கின்றன. எனவே, நீங்கள் உறுதியாக இப்பிறப்பில் முழுமை பெறுவீர்கள்.

3) மேற்படி சித்திநிலைத் தகுதிகளுக்கேற்பவே இப்பிறப்பில் 10 அருட்பட்டங்களுக்கு மேல் பெற்றுள்ள சுசீலா நாச்சியார்

அம்மையார் அவர்கள் தங்களுக்கு துணைவியாராக கிடைத்திருக்கிறார்கள். சிறப்பாகத் தங்கள் துணைவியார் நான்கு சன்னிதானப் பட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். அவரது திருவயிற்றில் தோன்றிய அனைவருமே அருளாளர்கள்தான். ஆனால், எதிர்பாராத விதமாக தேவகுமாரனாகிய திருச்செந்தூர் முருகப் பெருமானால் போர்க்களத்தில் ஆட்கொள்ளப்பட்ட சூரபத்மனின் கூறு தங்களுடைய திருநிறைச் செல்வனுக்கு இருப்பதால் உலகியல் மாயைகளில் உழன்று, இறுதியில் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்படுவார். இப்போது அருட்போருக்கு திருச்செந்தூர் முருகப் பெருமானே பொறுப்பேற்றுள்ளதால் சூரபத்மனின் கூறுகள் அனைவரும், சூரபத்மனின் அருட்படையில் பங்கு பெற்ற அனைவரும் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்படுவர். எனவே, கவலைப்பட வேண்டாம்.

எனவே, அனைத்தையும் அருளாட்சி நாயகமான, அண்டபேரண்ட அருட்பேரரசர், அருட்கொடை வள்ளல், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், தாத்தா, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் திருத்தாள்களில் ஒப்படைத்து விடுங்கள். உங்களை முழுமையாக தாத்தாவின் அருட்போர் ஆயத்தப் பணிகளிலும், அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்களிலும் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். அது போதும்.

நீங்கள் தாத்தாவின் மகள் வயிற்றுப் பேரனான நமது குருதேவர் குவலய குருபீடம், அண்டபேரண்ட அனாதி ஆதி சத்திகள் சன்னிதானம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், நிறையக்னூர், பரப்பிறம்மம், மந்தர மூர்த்தி, தாந்தரீக மூர்த்தி, ஏந்தரீக மூர்த்தி, ஞானவள்ளல், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு

சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களால் **இட்டும், தொட்டும், சுட்டியும்** அருள் பெற்று அருளூற்றுகவே மாற்றப்பட்டிருக்கிறீர்கள் தாங்கள். இதை உணர்ந்தும் உணர்த்தியுமே செயல்படுக, செயல்படுக, செயல்படுக.

4) திருவருட்செல்வரே! முனிபுங்கவரே! (புங்க முனி என்ற சிறப்புப் பெயருக்குரியவர் தாங்கள்) இருடியே! யோகியே! ஞானியே! ... இனியும் காலதாமதம் செய்யாதீர். அடிக்கடி குருவைச் சந்தித்து உங்களை முழுமையாக அருளூற்றுக்கிக் கொள்ளுங்கள். உங்களுடைய ஒவ்வொரு சொல்லும், செயலும், நோக்கும், போக்கும், ஊக்கும், பேச்சும், மூச்சும், ... உலக மக்களின் தாகங்களையும், பசிகளையும், கவலைகளையும், களைப்புகளையும், அயர்ச்சிகளையும், தளர்ச்சிகளையும், ... அகற்றட்டும்! அகற்றட்டும்! அகற்றட்டும்! அதாவது, அருளூற்றின் புனித நீர் எல்லா வறுமைகளையும், வெறுமைகளையும் அகற்றி பசுமை நிறை வளத்தை விளைவிக்கட்டும்.

5) திருவருட்செல்வ! பல பிறப்புக்களில் தாயும், சேயுமாக இருந்த சுசீலா நாச்சியாரும், செயநிர்மலா அம்பிகையும் இப்பிறப்பில் நடமாடும் தெய்வங்களாக இருந்து அருளுலகப் பொருளுலக இருளகற்றட்டும். ஊழ்வினையினால் நாகப் பாதிப்புக்கள், உலகியல் சிக்கல்கள் பெற்றுவிட்ட திருநிறைச் செல்வி சித்தர் மகள் செயநிர்மலா அம்பிகை தங்களுடைய உலகியல் மற்றும் பொருளாதார வசதி வாய்ப்புகளுக்கேற்ப அவ்வப்போது நேரில் வந்து பரிகாரங்களைச் செய்து செல்லலாம். சித்தர் மகள் என்று அறிவிக்கப்பட்டிருப்பதாலும், தாங்கள் மிகச் சிறந்த திருவருட்செல்வராக இருப்பதாலும், பெரியார் மாவட்ட அமைப்பாளராகப் பொறுப்பேற்றிருப்பதாலும்; நூறுயிரக்கணக்கில் செலவு செய்துதான் முழுமையாகப் பரிகாரம் செய்ய முடியும் என்றுள்ள பாதிப்புக்களை குருபீடமே திருமடத்தின் அருட்பணியாக ஏற்று முழுமையாக, இனமாகவே, இலவசமாகவே, அருட்கொடையாக

உங்களுக்கு நயாபைசா கூட செலவில்லாமல் எப்படியும் **18 மாதங்களுக்குள்** நல்ல முறையில் பரிகாரப் பூசைகளைச் செய்து அனைத்து பாதிப்புக்களையும் அகற்றி அருளுவார். கவலை வேண்டாம். ஏற்கனவே கூறியது போல் செவ்வாய் முதல் அல்லது திங்கள் முதல் வியாழக்கிழமை அல்லது வெள்ளி வரை பொன்னேரியில் தங்கி பரிகாரங்கள் செய்து கொள்ளலாம். குருபீடத்தைச் சந்திக்க எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்ற சிறப்பு அனுமதி உங்களுக்கு அளிக்கப்படுகிறது. இதைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

6) சித்தர் மகள் செயநிர்மலா அம்பிகையின் வலது கை ஆட்காட்டி விரல் நீளத்திற்கு வெள்ளிக் கம்பியில் (தென்னை விளக்குமாற்றுக் குச்சி பருமன் இருந்தால் போதும்) படத்தில் காட்டியுள்ள படி 5 நெளிவுகளுடைய, தலையைத் தூக்கிக் கொண்டிருக்கின்ற, வாலை நீட்டிக் கொண்டிருக்கின்ற சீறிப் படமெடுக்கும் நாகத்தின் வடிவம் ஒன்பது செய்து செப்புக் கலயம் (Copper Vessel) ஒன்றுக்குள் போட்டு பால் ஊற்றி மஞ்சள் துணியால் மூடி கட்டி எடுத்து வருவீர்களேயானால் அந்த நாகங்களைப் பயன்படுத்தி பரிகாரப் பூசைகள் ஆரம்பிக்கப்படும். பிறகு தாங்கள் அடிக்கடி தங்கள் ஊருக்குச் சென்று அங்கு நடைபெறும் பொய்யேரிக்கரை கருப்பண்ண சாமி அருட்கோட்டத்தில் வாராவாரம் அருட் பாதுகாப்புக்களைப் பெற்றுக் கொண்டும்; வசதி வாய்ப்புகளுக்கேற்ப பொன்னேரி வந்து நாகப் பாதிப்புகளை முழுமையாக அகற்றிக் கொள்ளலாம். நேரில் கூறியபடி உலகியலாக அனைத்து வகையான பாதிப்புகளையும், எதிர்பாராது ஏற்பட்டு விட்ட குறைகளையும் முழுமையாகச் சரி செய்து கொள்ளலாம். கவலைப்படவே தேவையில்லை. அனைத்தும் வெற்றியாகும். உங்களுடைய உள்ளம் போல் எல்லா நன்மைகளும் வந்து சேரும்.



7) சுசீலா அம்மையாரின் தெய்வீகக் காளித் திருத்தோற்றம் அருள் கூறுபாடுகள் பெற்று விளங்கும் செல்வி காமாட்சி; தன்னுடைய பயிற்சிகளாலும், முயற்சிகளாலும் அருளுலகத் தேர்ச்சி பெற்றிடுவாள் என்று குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், அருட்கொடை வள்ளல் நமது குருதேவர் வாழ்த்துகிறுர். இந்தச் செல்வ மகளின் நாக்கிலும், வாக்கிலும் கலைமகளின் அருள் இருக்கின்றது. எனவே, இவள் நமது இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் மறுமலர்ச்சி அடையச் செய்யும் பேச்சாளராக, அருட்செல்வியாக வளர வேண்டும் என்று குருபீடம் வாழ்த்துகிறது. இச் செல்வியின் யோகநிலைகளில் ஆத்தாள் தேவி காளியின் கூறுபாடும், சூலி, நீலி முதலியவர்களின் கூறுபாடுகளும் இருப்பதால் இவள் அருட்போரிலும் பங்கு பெற முடியும். இவளுக்குரிய **அவசரம், ஆத்திரம், கோபம், அசுரசத்தியின் ஆட்சி, ...** முதலிய பாதிப்புகள் சிறுகச் சிறுக நீங்கட்டும் என்று குருபீடம் வாழ்த்துகிறுர். இவளின் சேவை அருளாட்சிக்குத் தேவை. உடன் விரிவான பதில் அனுப்புக.

தஞ்சைத் தாத்தா மகிழ்கின்ற அளவிற்கு ஈரோடு மாவட்டம் முழுவதும் பல இடங்களில் அருட்கோட்டங்களைத் துவக்குங்கள். கணக்கற்றவர்களைச் சன்னிதானங்களாக மாற்றுங்கள். உங்களின் மூலம் பலர் பதினெண்சித்தர் மடத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் தெரிந்து கொள்ளும்படிச் செய்யுங்கள். பதினெண்சித்தர் மடத்தின் அச்சிட்ட அறிக்கைகளையும், புத்தகங்களையும் பலருக்கும் வழங்குங்கள். பாதிப்புள்ள இடங்களிலும், ஆர்வமுள்ளவர் இடங்களிலும் மெய்ஞ்ஞானக் கொடிகளை ஏற்றி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கிளை அலுவலகம், இந்து முன்னேற்றக் கழகத்தின் கிளை அலுவலகம், சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றம், சித்தர் கருவூரார் அருட்கோட்டம், சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம் முதலியவைகளைத் தோற்றுவியுங்கள்.

இ.மு.க. உறுப்பினர் அட்டைகளை பலருக்கும் வழங்குங்கள். அவற்றின் அரிய பெரிய பயன்களையும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் முறைகளையும் விளக்கி உரையுங்கள். (கருகுலத்தில் குருதேவர் ஆற்றிய அருளுரையின் கருத்துக்களையும் நினைவுபடுத்திச் செயல்படுங்கள்.)

8) **<u>இ.மு.க. உறுப்பினர் அட்டையின் தத்துவ நிலையும், செயல்சித்தாந்த நிலையும்:</u>**

I. இன்றைய விலைவாசி ஏற்ற நிலையில் ஒரு சுவைநீர் பருகுவது என்றாலும் இரண்டு ரூபாய்க்கு குறையாமல் செலவழித்தாக வேண்டும். எனவேதான், பொதுமக்களின் (**அருளுலகப் பொருளுலகப்**) **பாதுகாப்புக்காகவும்; "அருளுலகப் பொருளுலகப் பாதிப்புக்களைத் தடை செய்வதற்காகவும், அகற்றுவதற்காகவும்" ...** அருட்கொடை வள்ளலான தஞ்சைத் தாத்தாவின் அருளாணையால் தயாரிக்கப் பட்டதே இந்த இ.மு.க. உறுப்பினர் அட்டை.

**<u>குறிப்பு</u>**:- பதினெண்சித்தர் மடத்தில் போதிய பொருளாதார வசதி வாய்ப்புக்கள் இல்லாத நிலைகளிலும்; அவசர அவசியமாக ஆயிரக்கணக்கில் பொருட்செலவு செய்து இந்த இ.மு.க. உறுப்பினர் அட்டையை தயார் செய்து; ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி முதலியவைகளைச் செய்து; தவத்திலிருந்து அருளேற்றப்பட்டு அருளூறு பூசனைப் **பிறசாதமாக** நாடு முழுவதும் அனுப்பப்படுகின்றன இந்த இ.மு.க. உறுப்பினர் அட்டைகள். எனவேதான், தொடர்ந்து இந்த அட்டைகளைத் தயாரிப்பதற்காக, காணிக்கையாக அதுவும் பூசைச் செலவிற்காக ரூ.2/- பெறப்படுகிறது.

**<u>சிறப்புக் குறிப்பு</u>**:- நமது குருதேவர், குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் ஒவ்வொரு உறுப்பினர் அட்டையையும் தொட்டு வாழ்த்தி தமது அருட்கையால் திருக் கையெழுத்திட்டு

பொதுமக்களுக்கு வழங்குகிறார். இந்த பேருண்மையைத் தங்களைப் போன்றவர்கள் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறித்தான் விளங்க வைக்க வேண்டும். அப்பொழுதுதான், நமது **அருட்கொடை வள்ளலின் அருள்வழங்கு திருப்பணிகள்** ஏராளமான மக்களைச் சென்று அடையும்! அடையும்! அடையும்!

II. **செயல்முறை:-**

அதாவது, ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ளவர்கள் சிறியவர், பெரியவர், ஆண் பெண் வேறுபாடு இன்றி; ஒவ்வொருவரும் தங்கள் பாதுகாப்பிற்காக இ.மு.க. உறுப்பினர் அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதைக் கையில் வைத்துக் கொண்டே அன்றாடப் பூசைகள் செய்ய வேண்டும். எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் இந்த உறுப்பினர் அட்டையை எடுத்துச் சென்று பூசைத் தட்டிலே வைத்து அருட்சினை செய்து கொள்ளலாம் அல்லது கோயில் முன்னர் கற்பூரம் ஏற்றி, இந்த அட்டையை அதில் காட்டி தங்களை அருளுலக அறிமுகம் செய்து கொள்ளலாம். அதாவது, தாங்களும் அருளாட்சிக்காகப் பாடுபடுவதாக அருளுலகில் அறிவித்துக் கொள்ளலாம். தூங்கும் போது இந்த அட்டையைத் தலையணைக்கு அடியில் வைத்துக் கொள்ளலாம். எங்கே சென்றாலும், சட்டைப் பையிலோ, மடியிலோ அல்லது கால்சட்டைப் பையிலோ வைத்துக் கொள்வது மிகச் சிறந்த பயனையும், பாதுகாப்பையும் நல்கும்.

**குறிப்பு:-** எதிர்பாராத விதமாக உடல்நலப் பாதிப்போ, மனத் தளர்ச்சியோ, கவலையோ, தோல்வியோ, தொல்லையோ, .... ஏற்பட்டிட்டால் இந்த உறுப்பினர் அட்டையை வைத்திருப்பவர்கள் தங்களுடைய பெயர், வயது, முழுமையான முகவரி, என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், என்ன குலதெய்வம், விருப்ப தெய்வம், கிராமத்திலே ஊரிலே உள்ள காவல் தெய்வங்கள், ... முதலியவனவற்றைக் குறித்து ஓர் அஞ்சல் அட்டையில் (0.15காசு விலை) எழுதி

ஞானச்சாரியார், இந்து முன்னேற்றக் கழகம், பதினெண்சித்தர் மடம், அம்பத்தூர், சென்னை - 53, என்ற முகவரிக்கு அனுப்பினால், அதில் இவரது இ.மு.க. உறுப்பினர் அட்டையின் வரிசை எண் எழுதி அனுப்பினால்; உடனேயே இவரது அஞ்சல் அட்டையைப் பூசையில் வைத்து உரிய பாதுகாப்புக்கள் வழங்கப்படும். இவர்கள் பதில் அஞ்சல் அட்டை (Reply card) அனுப்பினால் அதை மந்திரித்து இவர்கள் தங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள உடனே அனுப்பப்படும். இவர்களே வசதி வாய்ப்புப்படி ஒரு ரூபாய் அஞ்சல் தலை இரண்டிற்கு குறையாமல் ஓர் அஞ்சல் உறையில் (Cover) வைத்து தங்களைப் பற்றியும், தங்கள் பாதிப்புக்கள் பற்றியும் எழுதி அனுப்பினால் உடனேயே இவர்களுக்காகப் பூசை செய்து திருநீறு, குங்குமம், முடிகயிறு முதலியவைகள் தேவைக்கேற்றபடி அனுப்பப்படும். இந்த சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்டம் மிகச் சிறப்பாக தலைமைப் பீடத்தில் செய்யப்படுகிறது. இதை பொதுமக்களுக்கு நன்கு தெரிவிக்க வேண்டும். புரிய வைக்க வேண்டும்.

### III. நமது இந்துமதத்தில்தான்;

(1) பெயரியல் (ஒருவருடைய பெயரைக் கொண்டு அவருடைய பாதிப்புக்களைக் கண்டு பரிகாரங்களைச் செய்தல்),

(2) வரியியல் (ஒருவருடைய கைரேகையை வைத்து அருட்கணிப்பு செய்து பாதிப்புக்களைக் கண்டுபிடித்து பரிகாரங்களைச் செய்தல்),

(3) மனையியல் (ஒருவர் வாழுகின்ற அல்லது தொழில் செய்கின்ற இடத்தின் தரையைக் கூட்டி சிறிதளவு தூசியை எடுத்து அருட்கணிப்பு செய்து பாதிப்புகளுக்குப் பரிகாரம் செய்தல்),

(4) அங்கவியல் (ஒருவருடைய புகைப்படத்தை வைத்து அருட்கணிப்பு செய்து பாதிப்புக்களைக் கண்டறிந்து பரிகாரங்களைச் செய்தல்),

(5) பிறப்பியல் (ஒருவர் பிறந்த நேரம் அல்லது கிழமை அல்லது சாதகம் அல்லது தாய் தகப்பனர் பெயர் முதலியவற்றில் ஏதாவது ஒன்றைத் தெரிவித்தால் போதும். அதைக் கொண்டு அருட்கணிப்பு கணித்து பரிகாரம் செய்தல்)

என்ற பஞ்சாங்க முறை, ஐந்தர முறை, ஐந்திற முறை, ஐந்திர முறை ... பல்வேறு வகையான மனித முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு, ஊழ்வினை, சூழ்வினை, ஆள்வினை, வினை, விதி, சாபம், கண்ணேறு, மந்திரவாதி பாதிப்புக்கள், நாள், கோள், மீன் பாதிப்புக்கள், காற்று, கருப்பு, பேய், பிசாசு பாதிப்புக்கள், உலகியல் சிக்கல்கள், நோய்கள் முதலிய அனைத்தையும் கணித்துப் பரிகாரம் செய்கின்ற **“அருட்கணிப்பு முறை”, “அருளுலகப் பாதுகாப்பு வழங்கும் பரிகார முறை”, “அருட்பணி விரிவாக்கத் திட்ட முறை”, “அருள்வழங்கு கலைகளின் செயல் முறை”** முதலிய செயல்முறைகள் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன.

இதனால்தான் **“இந்தப் புவிப்பரப்பிலேயே இந்துமதத்திற்கு ஈடாக, இணையாக, ஒப்பாக எந்த ஒரு மதமும் இல்லை, இல்லை, இல்லவே இல்லை”** என்ற கருத்தை உலகம் முழுவதும் உணர்த்துவதற்காகவே **இந்து மறுமலர்ச்சி இயக்கமும், இந்து முன்னேற்றக் கழகமும்** வீறு கொண்டு செயல்படப் புறப்பட்டு விட்டன. எனவேதான், முதலில் நம் நாட்டு மக்கள் அனைவரும் உடனடியாகத்

- தாங்கள் ஓர் இந்து;
- தங்களுடைய மதம் இந்துமதம்;
- தாங்கள் கும்பிடுகின்ற கடவுள்களும், தாங்கள் போற்றுகின்ற கோயில்களும், தாங்கள் புகழ்ந்து கொண்டாடுகின்ற நாயன்மார்களும், ஆழ்வார்களும், மற்ற அருளாளர்களும்; தாங்கள் கடைப்பிடிக்கின்ற சாத்தர, சாத்திர, சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகளும், விரதங்களும், திருநாள்களும்; தாங்கள் பூண்டு

கொள்கின்ற அருட்கோலங்களும் இந்துமதத்துக்கு உரியவை! இந்துமதத்துக்கு உரியவை! இந்துமதத்துக்கு உரியவைதான்!!! ... முதலிய **பேருண்மைகளை முழுமையாக உணர்ந்தும், ... முற்றிலுமாக மற்றவர்களுக்கு உணர்த்தியும் செயல்பட முன்வரும்படி செய்ய வேண்டும், செய்ய வேண்டும், செய்ய வேண்டும், செய்தேயாக வேண்டும்.** இதுதான் நமது கடமை, கடமை, கடமை.

**IV.** இந்துமதத்தில் அக்கரையும், ஆர்வமும், ஈடுபாடும், பத்தியும் உடையவர்கள், ... சிறியவர், பெரியவர் என்றோ அல்லது ஆண் பெண் என்றோ வேறுபாடு பார்க்காமல் எல்லோரையும் சித்தரடியாராக, சித்தரடியானாக, சித்தரடியாளாக மாற்றுங்கள். அவர்களுடைய விருப்பங்களுக்கேற்ப அருட்பட்டங்களைப் பெற்றுத் தாருங்கள். அதாவது, **குருதி வண்ணச் செவ்வாடை அணிந்து, அருட்பட்டங்கள் பெற்று ஒவ்வொருவரும் கடவுளைச் சந்திக்கவும், கடவுளாகவே மாறவும் உரிய அரிய பெரிய வாய்ப்புக்களை உருவாக்கித் தாருங்கள், உருவாக்கித் தாருங்கள், உருவாக்கித் தாருங்கள்**.

<u>**குறிப்பு**</u>:- திருவருட் செல்வரே! ஞானியே! யோகியே! தவசியே! சித்தரடியார் மா. சௌந்தரம் அவர்களே; இந்த ஞாலத்திலேயே, **“கடவுள்கள் மனிதர்களைச் சந்திக்க வருவார்கள்”** என்றும்; **“மனிதர்கள் கடவுள்களைச் சந்திக்கலாம்”** என்றும்; **“மனிதர்களே கடவுள்களாக மாறலாம்”** என்றும்; **“கடவுள்களையே தாயாக, தந்தையாக, உடன்பிறப்பாக, உற்ற தோழனாக, நண்பனாக, சேவகனாக, தொண்டனாக, மகனாகப் பெற்றிடலாம்”** என்றும் உறுதிமொழி கூறுகின்ற பதினெண்சித்தர்களுடைய இந்து வேதத்தின் செயல்வடிவமாகத் தோன்றியிருக்கின்ற ஒப்புயர்வற்ற இந்து மதம் ஒன்றுதான் இந்த உலகுக்கே எண்ணற்ற அருளாளர்களை, அருட்செல்வர்களை, தேவதூதர்களை, தேவகுமாரர்களை, தேவர்களை, தெய்வங்களை, கடவுள்களை

வாரி வாரி வழங்குகின்றது, வாரி வாரி வழங்குகின்றது, வாரி வாரி வழங்குகின்றது.

எனவேதான், **“பதினெண்சித்தர்களின் இந்து வேத மதமான இந்து மதம் எனும் ஆலமரத்தின் இலைகளாகவோ அல்லது கிளைகளாகவோ அல்லது விழுதுகளாகவோ அல்லது பூக்களாகவோ அல்லது காய்கனிகளாகவோ, அல்லது வித்துக்களாகவோதான் இந்த உலகில் வேதங்களும், மதங்களும் தோன்ற முடியும்”** என்று மிகத் தெளிவாகவும், எளிமையாகவும், அழுத்தம் திருத்தமாகவும், ஆணித்தரமாகவும் பதினெண்சித்தர்கள் கூறியுள்ளதை முதலில் நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு மனிதரின் செவிகளிலும் புகுந்து நெஞ்சுக்குள்ளே சென்று எதிரொலிக்கும்படிச் செய்ய வேண்டும். எதிரொலிக்கும்படிச் செய்ய வேண்டும், எதிரொலிக்கும்படிச் செய்ய வேண்டும். இதற்காகத் தாங்களும், தங்களின் மூலம் பலரும் அன்றாடம் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஒவ்வொரு வாய்ப்பையும், வசதியையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:-**

(a) சந்திக்கின்ற ஒவ்வொருவரிடமும் நமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் குறிப்பிட வேண்டும்.

(b) ஊரில் உள்ள கோயில்கள் அனைத்திற்கும், அடிக்கடி சென்று உரையாடல் அல்லது கருத்துப் பரிமாற்ற விவாதங்கள், விரிவுரைகள், சொற்பொழிவுகள் சிறிய அளவிலும், பெரிய அளவிலும் நிகழ்த்த வேண்டும்.

(c) ஆழ்வார்கள், நாயன்மார்கள், தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரியார், இராமலிங்க அடிகளார் ... முதலியவர்களின் பெயர்களில் உள்ள வழிபாட்டு மன்றங்கள், திருச்சபைகள், சங்கங்கள், ... பசனை மடங்கள், ... முதலிய நிறுவன நிர்வாகங்களுக்குச் சென்று பதினெண்சித்தர் வரலாறு,

பதினெண்சித்தர் மடத்தின் அருட்பணிகள், இ.ம.இ., இ.மு.க. நிறுவன நிர்வாகங்கள், நமது அருட்கோட்டங்கள், அருட்கோட்டத் திட்டங்கள், ... முதலியன பற்றி விளக்கி உரைத்தலும், நமது அச்சிட்ட அறிக்கைகளையும், அறிவிப்புப் புத்தகங்களையும், கையெழுத்துப் பிறதிகளையும், இயந்திர நகல்களையும் வழங்கி விளக்கம் அளித்தல் ... முதலிய பணிகளைச் செய்தல் வேண்டும். (இப்போதைக்கு நமது பூசைமுறைகள், அருள்வழங்கு முறைகள், பலி கொடுத்தல், இறைச்சி உணவுப் படையல், ... முதலியவைகள் பற்றி எங்கும் எவரிடமும் பேச வேண்டாம். ஏனென்றால், மிகுந்த பக்குவம் உடையவர்களிடம் மட்டுமே இதைப் பற்றி குருதேவரே கூறிக் கொள்வார், அல்லது அறிவிப்பார். அதுதான் நல்லது. அதுதான் தேவையில்லாத சச்சரவுகளையும், வாத விவாதங்களையும் தடுக்கும், அடக்கும். எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை.)

## V. பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு:-

திருவருட் செல்வ! சித்தரடியார் அருள்மிகு தாரமங்கலம் கைலாசநாதர் சன்னிதானம் மா. சௌந்தரம் அவர்களே! அறிவிக்கை எண் 7777 தாங்கள் ஏற்கனவே பார்த்த, படித்த ஒன்றாகும். அதனை இப்பக்கத்தில் மீண்டும் இணைத்திருக்கிறோம். இதன்படி, **ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஒவ்வொரு கோயிலிலும் உள்ள ஒவ்வொரு கடவுளுக்கும்** (ஒரு கோயிலில் எத்தனை வகையான கடவுள்கள் இருந்தாலும் அத்தனை கடவுள்களுக்கும்) 18 அருட்பட்டத்தவர்களை உருவாக்குவதுதான் இச்செயல் திட்டம்.

எடுத்துக்காட்டாக: ஈரோட்டில் பொய்யேரிக் கரை கருப்பண்ணசாமி கோயிலில் இரட்டை மகாமுனிகள், நாக கன்னி, மாரியம்மன், ஏழு கன்னிமார்கள் முதலிய கடவுள்கள் இருக்கின்றனர். இதற்கு

(a) ஈரோடு பொய்யேரிக்கரை கருப்பண்ணசாமி கோயில் இரட்டை முனீசுவரர் மடாதிபதி, பீடாதிபதி, ... வாமகோடிப் பீடம் என்று 18 அருட்பட்டங்களை உடைய 18 பேர்கள் உருவாக்கப் படுவர். இந்த 18 பேர்களும் மடாதிபதிக் குழு ஒன்று எனப்படுவர். இதேபோல் மடாதிபதிக் குழு இரண்டு, மடாதிபதிக் குழு மூன்று என்று வரிசைப்படி எத்தனை மடாதிபதிக் குழுக்களையும் உருவாக்கலாம்.

(b) ஈரோடு பொய்யேரிக்கரை கருப்பண்ண சாமி கோயில் நாககன்னி மடாதிபதி, பீடாதிபதி, ... வாமகோடிப் பீடம் என்று பெயருடைய ஒரு மடாதிபதிக் குழு உருவாக்கப்பட வேண்டும். இதைப்போல் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு ஒன்று, இரண்டு என்று எத்தனை மடாதிபதிக் குழுக்களை வேண்டுமானாலும் உருவாக்கலாம்.

(c) இதேபோன்று ஈரோடு பெரிய மாரியம்மன் பெயரிலும், ஈரோடு சிவன் கோயில் சிவன் பெயரிலும், அம்மன் பெயரிலும், அங்குள்ள முருகன், வள்ளி, தெய்வானை, பிள்ளையார், ... முதலிய ஒவ்வொரு கடவுளின் பெயராலும்; ஈரோடு பெருமால் கோயிலில் உள்ள பெருமால், தாயார், கருடாழ்வார், ஆஞ்சனேயர், ... முதலிய ஒவ்வொரு கடவுளின் பெயராலும் பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவுக்குரிய 18 அருட்பட்டத்தவர்களும் உருவாக்கப்பட வேண்டும். அந்த 18 பேர்களைக் கொண்ட மடாதிபதிக் குழு ஒன்று, இரண்டு, மூன்று என்று பல பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுக்களும் உருவாக்கப்படலாம், உருவாக்கப்பட வேண்டும்.

**VI.** மேற்படி பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவில் உள்ள 18 அருட்பட்டத்துக்குரிய ஒவ்வொருவரும்;

1. பெயர், 2. வயது, 3. படிப்பு, 4. தொழில், 5. நிலையான முகவரி, 6. பெற்றோர் பெயர், 7. பிறந்த தேதி, 8. விருப்ப தெய்வம். 9. குல

தெய்வம் முதலிய விவரங்களை எழுதி ரூ.11¼ தனித்தனியாகவோ அல்லது 18 பேர்களும் மொத்தமாக சேர்ந்தோ, அல்லது சேரச் சேர இரண்டு மூன்று பேர்களாகவோ தங்களின் மொத்தப் பணத்திற்கு வங்கியின் கேட்பு வரை ஓலை (Bank Demand Draft) உடனடியாக பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை (Pathinen Siddhar Madam Trust) என்ற முகவரிக்கு வாங்கி cross செய்து certificate of posting அல்லது பதிவு அஞ்சலில் அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார், இந்துவேத பாடசாலை, பதினெண்சித்தர் மடம், 13, குமாரசாமித் தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பினால் சுமார் ஒரு வார காலத்திற்குள் அல்லது 10 நாட்களுக்குள் அவரவர்க்குரிய **சத்தி, சித்திச் சக்கரம்** அனுப்பப்படும்.

**செய்முறை:-** பதினெண்சித்தர் மடத்தின் சன்னிதானங்களில் யாராவது ஒருவர் மூலம் (1) மார்பு, (2) நடுமுதுகு தலையருகில் (முன்பக்க கழுத்து அருகிலும், பின்பக்க பிடரி அருகில்), (3) வலது தோள்பட்டை, (4) இடது தோள்பட்டை, (5) நெற்றி ஆகிய ஐந்து இடங்களிலும் சந்தனம் பூசி சக்கரங்கள் எழுதி வாழ்த்தப் பெறுவர். பிறகு வாழ்த்தப் பெற்றவர்கள் தங்களது இரு கை விரல்களாலும் சத்தி சித்திச் சக்கரத்தை வைத்துக் கொண்டு முதலில் கழுத்தருகில் மார்பிலும், இரண்டாவதாக இடது தோள்பட்டையிலும், மூன்றாவதாக பிடரியின் முதுகிலும், நான்காவதாக வலது தோள்பட்டையிலும், ஐந்தாவதாக நெற்றியிலும் வைத்து பூசையை நிறைவு செய்ய வேண்டும்.

அதாவது, ஒவ்வொரு இடத்திலும் சக்கரத்தை வைத்துக் கொண்டு, அன்றாடப் பூசைமொழிப் புத்தகத்தில் உள்ள நான்கு பூசைமொழி வாசகங்களையும், அதாவது காயந்திரி மந்தரம், சத்தி காயந்திரி மந்திரம், கற்பூர சோதி வழிபாட்டு மந்தரம், அருட்சினை மந்திறம்

எனும் நான்கையும் ஒருமுறை தாங்களே கூற வேண்டும் அல்லது பக்கத்தில் யாரையாவது படிக்கச் சொல்லி திருப்பிக் கூற வேண்டும். இப்படி இந்தச் சக்கரத்தை ஐந்து இடங்களில் வைக்கும் பொழுது; அன்றுடப் பூசைமொழிப் புத்தகத்தில் உள்ள நான்கு காயந்திரிகளேயும் ஒருமுறை மனப்பாடமாகத் தாங்களே கூற வேண்டும். அல்லது யாரையாவது படிக்கச் சொல்லி ஒவ்வொரு வரியாகத் திருப்பிச் சொல்ல வேண்டும். அதாவது, காயந்திரியை படிப்பவர்கள் ஒவ்வொரு வரியாகப் படிக்க வேண்டும். பூசை செய்பவர்கள் அப்போதுதான் எளிமையாகத் திருப்பிக் கூற முடியும்.

மேலும், இந்தச் சத்தி சித்திப் பூசையை ஆரம்பிக்கும் பொழுது ஒவ்வொருவர் முன்னிலேயிலும் ஒரே ஓர் ஊதுபத்தியாவது ஏற்றி வைக்கப்பட வேண்டும். அல்லது பூசை முடியும் வரை ஒவ்வொரு ஊதுபத்தியாக ஏற்றி வைத்துக் கொண்டிருந்தால் நல்லது. இதற்குப் படையலாக பொறி, கடலே, அவல், சர்க்கரை, ... முதலியவற்றில் ஏதாவது ஒன்று, அல்லது நான்கும், அல்லது ஏதேனும் கனிகள், அல்லது சமைத்த உணவுப் பொருட்கள் படைக்கலாம். அப்படிப் படைப்பதை தாமும் உண்டு, பூசைக்கு வந்திருப்பவர்களுக்கும் கொடுத்து, விரும்புபவர்க்கு எடுத்துச் சென்றும் தரலாம்.

**VII.** மேற்படி சத்தி சித்திப் பூசையை அவரவர் வீட்டிலோ அல்லது பொது இடங்களிலோ அல்லது அருகில் உள்ள எந்த கோயில் வளாகத்திலோ அல்லது அதே கோயிலுக்குச் சென்றோ செய்யலாம், செய்யலாம், செய்யலாம்.

**VIII.** மேற்படி மடாதிபதிக் குழு அருட்பட்டத்துக்கு உரிய சத்தி சித்திச் சக்கரப் பூசையை தனித்தோ அல்லது தங்களோடு சேர்ந்து மடாதிபதிக் குழு பட்டம் பெற்றுள்ளவர்களில் சிலரோடு சேர்ந்தோ அல்லது 18 பேரும் ஒன்று சேர்ந்தோ பூசை செய்யலாம்.

**IX.** கட்டாயமாக மாதத்தில் ஒருமுறை அமாவாசையிலோ அல்லது முழுநிலவு நாளிலோ அந்தந்த மடாதிபதிக் குழுவைச் சேர்ந்த 18 பேர்களும் அவர்களுடைய அருட்பட்டத்துக்குரிய கோயிலில் ஒன்று கூடி; முடிந்தால் அக்கடவுளின் முன் அமர்ந்து இந்த சத்தி சித்திச் சக்கரப் பூசையைச் செய்து கொள்ள வேண்டும். அப்போது இந்த 18 பேர்களில் யாராவது ஒருவருக்காவது அன்ருடப் பூசைமொழியில் உள்ள 4 காயந்திரிகளும் தெரிந்திருக்க வேண்டும். அல்லது யாராவது ஒருவரை வரவழைத்து 4 காயந்திரிகளை படிக்கச் சொல்லி திருப்பிக் கூறி பூசையை நிறைவு செய்ய வேண்டும்.

அப்படிக் கூட்டமாகக் கூடி பூசை செய்யும் போது, தங்களது உடம்பில் உள்ள 5 இடங்களில் சக்கரத்தை வைத்துப் பூசை செய்து முடித்தால் ஒரு நிறைவுப் பூசை என்று பெயர். இப்படிச் செய்யப்படும் நிறைவுப் பூசையை ஒன்பது முறை (நவக்கிரகங்களுக்காக = ஒன்பது கோள்களுக்காக) செய்து நிறுத்திக் கொள்ளலாம். அல்லது 12 முறைகள் (12 இராசிகளுக்காக) செய்யலாம்; அல்லது 27 முறை (27 விண்மீன்கள்) செய்து நிறுத்திக் கொள்ளலாம். அல்லது 48 முறை (1 மண்டலம்) செய்தும் நிறுத்திக் கொள்ளலாம்.

இப்படி அமாவாசையிலோ அல்லது முழுநிலவு நாளிலோ செய்யக் கூடிய கூட்டு வழிபாட்டில் கலந்து கொள்ளும் 18 பேர்களும் முதலில் இருந்து இறுதி வரை ஒன்ருக இருந்து பூசை செய்தால் பயன் கிடைக்கும். எல்லோர்க்கும் போதிய வசதிவாய்ப்பு தேவை என்பதால் கலந்து பேசி; அந்தந்த மாதத்தில் அமாவாசையிலோ அல்லது முழுநிலவு நாளிலோ வசதிபோல் தேர்ந்தெடுத்து முடிவு செய்து 18 பேர்களும் ஒன்றுகூடிப் பூசை செய்தால் சிறந்த பயன் அளிக்கும்.

அதாவது, இந்தக் கூட்டு வழிபாடு மாதாமாதம் அமாவாசை, முழுநிலவு நாளில் நடத்தப் படலாம். அது மட்டுமல்ல, முழுநிலவுப் பூசை மட்டும் முழுநிலவுக்கு முதல் நாளிலோ அல்லது மறுநாளிலோ நடத்தலாம். இச் செயல்திட்டத்தை நன்கு புரிந்து செயல்படுங்கள்.

**X.** பதினெண்சித்தர் பீடாதிபதிகளால்தான் மிகப் பெரிய இடைவெளிக்குப் பிறகு மடாதிபதி, பீடாதிபதி, சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், ... வாமகோடிப் பீடம் எனும் 18 வகைப்பட்ட அருட்பட்டங்களையும் விரும்புகிறவர்களுக்கு எல்லாம் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றியும், தொழிலாளி முதலாளி என்ற வேறுபாடு இன்றியும், உயர்ந்த தாழ்ந்த சாதி என்ற வேறுபாடின்றியும், ஆண் பெண் என்ற வேறுபாடின்றியும், சிறியவர் பெரியவர் என்ற வேறுபாடின்றியும், ... உடனுக்குடன் வழங்கப்படுகிறது. உடனுக்குடன் வழங்கப்படுகிறது, உடனுக்குடன் வழங்கப்படுகிறது.

ஏனென்றால், மிகப்பெரிய நெடிய இடைவெளிகளில் தோன்றக் கூடிய பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி எனும் முழுமையுடைய குருமகா சன்னிதானங்கள்தான் இந்து வேத நாயகமாக, இந்து மதத் தந்தையாக, இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராக உரிமையும் பெருமையும் பெறுகிறார்கள். இத்தகைய உரிமையும், பெருமையும் உடையவர்தான் நமது தலைவர், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் ஆவார். எனவே, இமயம் முதல் குமரி வரை உள்ள எல்லாக் கோயில்களுக்கும், எல்லாக் கோயில்களில் உள்ள கடவுள்களுக்கும் 18 வகையான அருட்பட்டங்களை உடைய **“பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு”** உருவாக்கப்பட்டாக வேண்டும், உருவாக்கப்பட்டாக வேண்டும், உருவாக்கப்பட்டேயாக வேண்டும்.

இம்மாபெரும் செயல்திட்டம் தமிழகத்தில்தான் செயல்படுத்தப் படுகிறது. ஏனென்றால், தமிழ்நாடுதான் இந்து வேதமும் இந்து மதமும் பிறந்த இடம், வளர்ந்த இடம், சிறப்பாக வாழுகின்ற இடம். மேலும், இந்து வேதத்தில், **“தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும்தான் அருட்பயிர்களின் விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், நாற்றங்கால்கள்”** என்று மிகத் தெளிவாக, எளிமையாக, நேரடியாகத் தமிழர்களின் பெருமைகளும், தமிழர்களின் இல்லங்களின் உரிமைகளும், இவற்றின் மூலம் தமிழ் நாட்டின் அருமைகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. இப்பேருண்மைகளைத் தாங்களும் தங்கள் மூலம் பலரும் உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுங்கள்.

9) பேரன்புடைய திருவருட்செல்வரே! இன்று, இந்துமத ஆண்டு 43,73,093 (நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து தொண்ணூற்று மூன்று ஆண்டு) ஆக்குரோச ஆண்டு ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் (18.8.92) செவ்வாய்க்கிழமை அருள்மிகு சித்தரடியார் கும்மிடிப்பூண்டி சுப்பிரமணி அவர்கள் (1) உறையூர் வெற்றிவேல் தடக்கைக்காளி சன்னிதானம், (2) அருள்மிகு திருக்கடவூர் வீரட்டானேசுவரர் அபிராமி அம்மன் சன்னிதானம், (3) சமயபுரம் மாரியம்மன் ஆதீனம், (4) மாங்காடு காமாட்சி அம்மன் தம்பிரான், (5) அனாதி சங்கராச்சாரியார் பீடம், (6) காமகோடி பீடாதிபதி, கடவுளாச்சாரியார், (7) சித்தரடியார், (8) கும்மிடிப்பூண்டி பெரியவாள் என்ற பட்டங்களோடு இறுதியாக நிறைவாக ஒன்பதாவதாக “அருட்போர் மாதண்ட நாயகங்களில் ஒருவர்” என்ற அருட்பட்டம் பெற்று இந்நெடிய திருவோலையை; குருதேவர் **அருளாணை பெற்ற குருவாணை**யாக அருளிட, திருவாய் மலர்ந்து கூறிடத் திருவோலை நாயகமாக இருந்து எழுதியதே இந்நெடிய திருவோலை.

இதற்குத் தாங்களும், தங்களது குடும்பத்தவர்களும் கையெழுத்திலோ அல்லது தட்டெழுத்திலோ நகல்கள் தயாரித்து குருபீடத்திற்கு தொடர்ந்து

அனுப்பினுல் பலருக்கும் நாடு முழுவதும் அனுப்பலாம். நீங்களும் பொறுப்பாக இந்த அஞ்சலை பத்திரமாகப் பாதுகாத்து முடிந்தால் இயந்திர நகல் (Xerox) மேற்கு மண்டல மாதண்ட நாயகம் திரு பிரபாகரன் B.Sc., M.A.; மேற்கு மண்டல செயலாளர் இரா. வெங்கடேசன் M.A.,B.L.; மேற்கு மண்டல இ.மு.க. தலைவர் இர. கங்காதரக்குமார்; மேற்கு மண்டல மாநாட்டுச் சிறப்பு அமைப்பாளர் M.C. இராமன்; தெற்கு மண்டல தலைவர் ச. துரைராசன் B.Sc., .... முதலியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் படித்துக் காட்டுங்கள், படித்துக் காட்டுங்கள், படித்துக் காட்டுங்கள். அல்லது படிக்கக் கொடுங்கள், படிக்கக் கொடுங்கள், படிக்கக் கொடுங்கள். மேலும், ஈரோடு மாவட்ட நிர்வாகக் குழுவைக் கூட்டி இந்த அஞ்சலை நிதானமாகவும், முழுமையாகவும் கட்டாயம் படித்துக் காட்டுங்கள். அப்போதுதான் உங்கள் அருமை பெருமை தெரியும், தெரியும், தெரியும்.

**அருட்போர் மாதண்ட நாயகம்**
அ. சுப்பிரமணி,
கும்மிடிப்பூண்டி.

**//உண்மை நகல்//**
**// மூல நகல்:- சித்தராடியான் ஒருவரின் கையெழுத்தில் இருந்திட்ட கையெழுத்துப் பிறதி நகல். இந்த முழுமையான நகல் கடந்தப்பட்டி சித்தராடியான் திரு அண்ணாமலை அவர்களின் கோப்புக்களிலிருந்து பெறப்பட்டது. //**

# அறிவிக்கை எண்: 7777

# பதினெண்சித்தர் மடாதிபதி குழு

1. **மடாதிபதி** => மடம் = இளமை;
அதி = வளர்ந்து கொண்டே இருக்கும், அழியாதது;
பதி = தலைவன்;

குறிப்பிட்ட கோயில் கடவுளோடு சேர்ந்து ஆவி, ஆன்மா, ஆருயிர் மாறுத இளமையோடு தலைமை பெற்று விளங்கிடும்.

2. **பீடாதிபதி** => அந்தக் கடவுளின் இருக்கை,

அந்த இருக்கையில் அதிகம் வளர்ந்து கொண்டே போவது, அந்தக் கடவுளாகவே மாறி செல்வாக்கு வளர்ந்து கொண்டே போவது.

3. **சன்னிதானம்** => குறிப்பிட்ட கடவுளாகவே வாழுதல்,

அவருடைய பதிலியாக அருளைத் தானமாக வழங்குவது.

4. **ஆதீனம்** => குறிப்பிட்ட கடவுள், அவரைச் சார்ந்த அருள் உலகம், பொருள் உலகம் அனைத்தையும் தனதாக்கிக் கொள்ளுதல், ஆதீனப்படுத்துதல்.

5. **தம்பிரான்** => தலைவன், குறிப்பிட்ட கடவுளின் தலைவன்,

குறிப்பிட்ட கடவுளுக்குத் தோழன், குறிப்பிட்ட கடவுளுக்குத் தொண்டன்; குறிப்பிட்ட கடவுளாகவே மாறுதல்.

6. **பண்டாரம்** => கோயிலைச் சார்ந்த சொத்துக்கள் அனைத்துக்கும் முழு உரிமை பூண்டு அருளை மாலையாக அணிந்து கொண்டு; அருளை பிறருக்கும் மாலையாக அணிந்து கொள்ள வைப்பவர்.

பண்டம் = அருள் பண்டம்;

ஆரம் = மாலை;

7. **பண்டார சன்னதி** => அருள் ஆறுக ஓடுகின்றவர்

8. **பண்டார சந்நிதி** => அருளை செல்வமாகப் பெற்றிருப்பவர், வழங்குபவர்.

9. **அரியவாள்** => அரிய = அருமை நிறைந்த;

வாள் = துன்பங்களை வெட்டிக் களையும்;

துரோகிகளை, எதிரிகளை, துன்பங்களை வெட்டி வீழ்த்தும் அருமையான வாள் போன்ற அருளாளர்கள்.

10. **கூரியவாள்** => கூர்மையான வாள்;

கூர்மையான வாள் = அருளாற்றலில் கூர்மையான வாள்.

11. **சீரியவாள்** => சிறந்த வாள்;

சீர்மை - சிறந்த வடிவமுடைய வாள், சிறப்புடையவர்.

12. **பெரியவாள்** => அருளாற்றலில் பெருமையும், பேராற்றலும் கொண்டு செயல்படக் கூடிய வாள்.

13. **நேரியவாள்** => அருளுலகில் நேர்மையை நிலைநிறுத்துவதற்காக நேரிடையாகப் போரிட்டு வெற்றியைப் பெறுவதற்கு உதவுகின்ற நேர்த்தியான வாள்.

நேர்த்தி = மற்றதோடு ஒப்பிடுவதற்கு சிறந்தது.

14. **வீரியவாள்** => எதிரிகளை அழிப்பதோடு நல்லவர்களுக்கு வீரத்தைத் தருகின்ற வாள்.

தானும் வீரமாக இருந்து பிறருக்கும் வீரத்தைத் தருகின்ற வாள் போன்றவர்கள்.

15. **ஏமகோடிப் பீடம்** => ஏமம் = சுடுகாட்டுத் தீ;

சிவன் வாழ்வின் முடிவு.

இறப்பிலும் சோதிநிலை (ஒளி நிலை) பெற்றுத் தரக் கூடிய, சித்தியைத் தரக் கூடிய பீடம் = பீடாதிபதி.

16. **காமகோடிப் பீடம்** => ‘உலகியலாக உண்டாகக் கூடிய அனைத்து வகையான ஆசைகளும் ஏற்றுக் கொள்ளத் தக்கவையே. எதையும் அடக்கவோ, துறக்கவோ, மறக்கவோ, மறுக்கவோ, வெறுக்கவோ தேவையில்லை. இயல்பான இல்லற வாழ்க்கை வாழ்வதுதான் சிறந்தது’ என்ற சித்தர்நெறியை குறிப்பிட்ட கடவுளின் பதிலியாக இருந்து விளக்குகின்றவர்கள். (மனைவி மக்களோடு இருந்து விளக்குபவர்கள்தான் காமகோடி.)

17. **சோமகோடிப் பீடம்** => சோமம் = தெய்வீகத் தீ. இது முருகனுக்கு உரியது.

முருகன் - போர்ப்படைத் தளபதி, சேனாதிபதி; அதாவது போர்க்குணம் உடைய அனைத்து வகையான கடவுளர்களையும் குறிக்கக் கூடியது.

அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புக்காகப் போராடக் கூடிய பீடாதிபதி.

சோமத் தீ அதிகமாகவும், குறைவாகவும் எரியக் கூடாது. இளமையாக இருக்க வேண்டும். யாராலும், எதனாலும் குறைக்கவோ, மறைக்கவோ, அதிகமாக்கிடவோ முடியாத ஒன்று; நிலையாக இருக்கும். எப்பொழுதும் வெற்றி தரக்கூடிய தீயாக, கடவுளின் ஆற்றலாக, குறிப்பிட்ட கடவுளின் பதிலியாக வாழலாம்.

18. **வாமகோடிப் பீடம்** => மிகக் குறுகியதாக, சிறியதாக, நெற்றிக்கண் போன்றது. புருவ மையத்திலிருந்து ஒளிவிட்டுக் கொண்டிருப்பது. விளக்கின் சுடர் போன்றிருப்பது.

இந்த வாமத்தீ எப்பொழுது வேண்டுமானாலும் விசும்பளந்த அகண்டப் பெருந்தீயாக மாறும்.

வாமனம், திருவிக்கிரமன் (*விசுவரூபம்*) பேருருக் கொண்டு செயல்பட்டது போல்;

சிவபெருமான் நெற்றிக் கண்ணிலுள்ள தீ; திரிபுரத்தை எரிக்கக் கூடியதாக பேருருக் கொண்டது போல்; மிகப்பெரிய வடிவம் பெற்றுச் செயலாற்றக் கூடிய வல்லமை பெற்றது வாமத் தீ. எனவே, இது பயிற்சியால் குறிப்பிட்ட கடவுளை எப்பொழுதும் தன்னுடைய நெற்றிக் கண்ணில் வைத்திருப்பது. இந்த வாமகோடிப் பீடம் கண்ணைத் திறந்து பார்த்தாலும் சரி, கண்ணை மூடி நினைத்தாலும் சரி; நினைத்தது நடக்கும். அவ்வளவு பெரிய சித்தி நிலை உடையது வாம சித்தி.

கோடி = எல்லை; பெரியது; முழுமையானது; பேராற்றலை உடையது, ... என்று 14 சொற்களில் பொருள் சொல்லப்படுகிறது. எனவே ஏம, காம, சோம, வாம என்ற நான்கும்தான் நான்வேதங்களாக இருக்கின்றன.

வரிசையாகச் சொன்னால்,

இருக்கு வேதம் = ஏமகோடிப் பீடம்;
அசுர வேதம் = காமகோடிப் பீடம்;
யாம வேதம் = சோமகோடிப் பீடம்;
அதர்வான வேதம் = வாமகோடிப் பீடம்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: கையெழுத்துப் பிறதியாக கிடைத்தது.//**

# <u>பதினெண்சித்தர்களின் குடமுழுக்குப் பூசைமுறை</u>

இந்து மதத்தின் மூலவர்களான பதினெண்சித்தர்கள்தான், தங்களுடைய துணைத் தலைவர்களான பதினெட்டாம்படிக் கருப்புக்களையும், தாங்கள் தோற்றுவித்த நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களையும், அண்ட பேரண்டங்களிலிருந்து தாங்கள் அழைத்து வந்த நாற்பத்தெட்டு வகைக் கடவுள்களையும், நாற்பத்தெட்டு வழிபடு நிலையினர்களையும் பயன்படுத்தி இப்பூவுலகு முழுதும் உள்ள அருளூறு ஊற்றுக்களை கண்டறிந்து; அந்த அருளூறு ஊற்றுக்கள் என்றென்றும் மக்களுக்குப் பயன்படும் வண்ணம் நாற்பத்தெட்டு வகைக் கோயில்களைக் கட்டினர்கள்.

அம்மட்டின்றி இப்பூவுலகில் மழை, காற்று, கடல்கோள் (கடல் பொங்குவது), நிலநடுக்கம் முதலியவைகளால் நிலப் பகுதிகள் சிதைவதும், அழிவதும், நீருள் மூழ்குவதும், புதிய நிலப் பகுதிகள் நீருள்ளிருந்து தோன்றுவதும் நிகழக் கூடும் என்பதால் இந்த உலகில் நிலத்திலும், நீர்ப்பகுதியிலும் உள்ள அனைத்து அருளூறு ஊற்றுக்களையும் கண்டுபிடித்து; அவற்றையும் மானுடருக்குப் பயன்படும்படிச் செய்திடவே

(i) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட **“கருவறைகள்”**,

(ii) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட **“வெட்டவெளிக் கருவறைகள்”**,

(iii) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட **“வழிபாட்டுநிலையக் கருவறைகள்”**,

(iv) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட **“கோயில் மூலக் கருவறைகள்”** எனும் நான்கு வகையினை உருவாக்கினர்கள்.

இப்படி உருவாக்கப்படுகின்ற நான்கு வகைப்பட்ட கருவறைகளுக்கும் முதன்முதலில் (ஆரம்பத்தில்) அருளேற்றும் பூசை முறைக்கு **உயிர்ப்பு ஊட்டும் குடமுழுக்கு பூசைமுறை**யையும்; இப்படி உயிர்ப்பு முறை

குடமுழுக்குப் பூசைமுறை மூலம் உருவாக்கப்பட்ட நான்கு வகைப்பட்ட கருவறைகளையும் மீண்டும் விரிவாக்கியோ, செப்பனிட்டோ, திருப்பணிகள் செய்தோ புத்துயிர்ப்பு செய்வதற்கு புத்துயிர்ப்பு ஊட்டும் **புத்துயிர்ப்பு குடமுழுக்குப் பூசைமுறை**யையும் உண்டாக்கினார்கள்.

இவை பற்றிய முழுமையான விளக்கங்களை '**பதினெண்சித்தர்களின் குடமுழுக்குப் பூசைமுறை**' என்ற நூல் விளக்குகிறது. இத்துடன் குடமுழுக்குப் பூசைமுறைகளைச் செய்யக்கூடிய ஆச்சாரியார்கள் வாழையடி வாழையெனப் பாரம்பரியமாகத் தோன்றவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள் பதினெண்சித்தர்கள்.

எனவேதான், "**இந்த உலகம் முழுதும் உள்ள எல்லா மதத்துக்குமுரிய மூலக் கோயில்கள் அனைத்தும் தமிழர்களால்தான் கட்டப்பட்டவை. தமிழ்மொழியின் வேதங்களால்தான் உயிர்ப்பு ஊட்டப் பெற்றவை**" என்று பதினெண்சித்தர்கள் கூறுகிறார்கள்.

**//"ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்து வேதத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்து மதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!" என்ற தலைப்பில் 1992இல் குருதேவர் எழுதியருளிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதி.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின்** குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

இந்து வேதத்தில், "தமிழர்களின் உள்ளங்களும், இல்லங்களும்தான் அருட்பயிர்களின் விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், நாற்றங்கால்கள்" என்று மிகத் தெளிவாக, எளிமையாக, நேரடியாகத் தமிழர்களின் பெருமைகளும், தமிழர்களின் இல்லங்களின் உரிமைகளும், இவற்றின் மூலம் தமிழ் நாட்டின் அருமைகளும் விளக்கப் பட்டிருக்கின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை: ரூ.10/-